வருகின்றன. அந்தப் பணிகள் வில்லிவாக்கம் பகுதி மட்டுமல்லாமல், நிதிநிலைமைக்கேற்ப படிப்படியாக மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

சாலையை அகலப்படுத்துதல்

***54800 திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை முதல் முத்துப்பேட்டை வரையிலான மாவட்ட முக்கியச் சாலையினை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பட்டுக்கோட்டை—முத்துப்பேட்டை மாவட்ட முக்கியச் சாலையினை அகலப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையிலிருந்து முத்துப்பேட்டைக்குச் செல்லக்கூடிய சாலை மிக முக்கியமான சாலையாகும். அச்சாலை,*

மாவட்ட முக்கியச் சாலையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. வேளாங்கண்ணிக்கு செல்லக்கூடிய பயணிகள், தஞ்சாவூரிலிருந்து வரக்கூடியவர்கள் என்று அதிக அளவில் பயணிகள் அச்சாலையில் பயணம் செய்துகொண்டிருக்கின்றார்கள். அச்சாலையின் நீளம் மொத்தம் 13 கி.மீ. ஆகும். அச்சாலையின் ஒருசில இடங்கள் நன்றாக இருக்கின்றன; ஒருசில இடங்கள் மிக மோசமான நிலைமையில் இருக்கின்றன. இதுகுறித்து, ஏற்கெனவே பலமுறை இம்மாமன்றத்தில் நான் கேள்வி எழுப்பியிருக்கின்றேன். எனவே, ஆய்வு செய்து, முழுமையாக அந்தச் சாலையினை மேம்பாடு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை—முத்துப்பேட்டை சாலை 46/2 கி.மீ.–லிருந்து 63/4 கி.மீ. வரை நெடுஞ்சாலைத் துறையின் தஞ்சாவூர் கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலை மாநில நெடுஞ்சாலையான தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, காரைக்குடி, காளையார்கோவில், மறவமங்கலம் சாலையை இணைக்கிறது. பட்டுக்கோட்டை—முத்துப்பேட்டை சாலையின் நீளம் 17.2 கி.மீ. ஆகும். இதில், 46/200 கி.மீ. முதல் 48/600 கி.மீ. வரை பட்டுக்கோட்டை நகரத்தில் வரும் 2.4 கி.மீ. பகுதி, 7 மீ. அகலத்தில் தற்போது இருவழித் தடமாக உள்ளது. 48/600 கி.மீ. முதல் 63/400 கி.மீ. வரை உள்ள 14.8 கி.மீ. இடைவழித் தடமாக உள்ளது. 5.5 கி.மீ. நீளமுள்ள இச்சாலையை வருங்காலங்களில், முன்னுரிமை அடிப்படையில் போக்குவரத்துச் செறிவிற்கேற்ப இருவழித் தடமாக மாற்றியமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வரக்கூடிய மழைக்

காலத்திற்குள்ளாவது அதைச் சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, துவரங்குறிச்சி என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியில் இருக்கின்ற சாலைகளிலெல்லாம் மிக மோசமாக potholes என்று சொல்லக்கூடிய பள்ளங்கள் இருக்கின்றன. அதைத் தற்காலிகமாகப் பழுது நீக்கம் செய்து, விரைவில் மேம்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கடந்த நான்கு ஆண்டுக்காலத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலமாக 86.70 கி.மீ. சாலைகள் ரூ.51.72 கோடி செலவில் அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளன. 2015—2016 ஆம் ஆண்டில் 7.25 கி.மீ. நீளச் சாலைகள் ரூ.12.15 கோடி மதிப்பில் அகலப்படுத்தி, மேம்படுத்தப்பட உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சாலைகள் பழுதடைந்திருக்கின்றன என்று சுட்டிக்காட்டியுள்ளார்கள். அந்தப் பழுதுகளை நீக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி, கும்பகோணம், தஞ்சாவூர் NH—45C, சுமார் 165 கி.மீ. நீளமுள்ள சாலையை, நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணியில், தஞ்சாவூர் பகுதியில் 42 கிராமங்களில் புதிதாக இருவழிச் சாலை அமைக்கும் நிலையில் நில ஆர்ஜிதப் பணிகள் பெருமளவில் நிறைவு பெற்றதாகத் தெரிகின்றது. 2016—ல் நடைபெறவிருக்கும் மகாமகத் திருவிழாவை முன்னிட்டு, நில ஆர்ஜிதப் பணி, சாலை அமைக்கும் பணி, பாலம் கட்டும் பணி, இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி போன்ற பணிகளை விரைவுபடுத்தி, 2016 மகாமகத் திருவிழாவிற்குள் பொது மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மகாமகத் திருவிழாவை முன்னிட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி, கும்பகோணம் பகுதியிலுள்ள 41 கி.மீ. நீளச் சாலைகளை ரூ.30 கோடி மதிப்பில் சீரமைக்கும் பணிகள் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியில், திருப்பூண்டி, காரப்பிடாகை, சடையன்கோட்டகம் வழியாக தலைஞாயிறு செல்லக்கூடிய சாலை உள்ளது. இந்தச் சாலை, காரப்பிடாகை கிராமத்திலிருந்து போக்குவரத்திற்கு மிகவும் முக்கியமான சாலையாகும். பேருந்து மூலமாக நாகப்பட்டினத்தை, பல கிராமங்களோடு இணைக்கக்கூடிய சாலை, இந்தச் சாலை. இந்தச் சாலை மிகவும் சீர்கேடு அடைந்திருக்கிறது. இதனால், பேருந்து மற்றும் இரு சக்கர வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் உள்ளது. ஆகவே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையை உடனடியாகச் சீர் செய்து தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட சாலைகளை எடுத்து, சீர் செய்யும் பணியை மேற்கொண்டு சீர்செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலையையும் முன்னுரிமை

அடிப்படையில் இனி வருங்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப எடுத்து, சீர் செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. பழனிசாமி அவர்கள்.

திரு. கே.சி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் வாங்கல்-மோகனூர் மேம்பாலம் கட்டும் பணிகளில் அநேகமாக அனைத்துப் பணிகளும் முடிவுற்ற நிலையில் உள்ளன. மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்களெல்லாம் ஆய்வு செய்திருக்கிறார்கள். அந்த மேம்பாலம் ஏன் இன்னும் திறக்கப்படவில்லையென்று தெரியவில்லை. பணிகள் அனைத்தும் முடிவுற்றிருக்கின்றன. தொடர்ந்து அதைத் திறக்காமல் அப்படியே வைத்திருப்பதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. அந்தப் பாலத்தை எப்போது திறப்பார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய அந்தப் பாலப் பணி, அவர்களுடைய கடந்த கால ஆட்சியில் தொடங்கப்பட்டது. அப்போதைய ஒப்பந்ததாரர்கள் சரியாக அந்தப் பணியை மேற்கொள்ளாமல், கிடப்பிலே போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அமைந்தபிறகு, அதற்குப் புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரைவாக அந்தப் பாலப் பணிகள் முடிவுபெறும் நிலையில் இருக்கின்றன. இன்னும் சிறு சிறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை அனைத்தும் முழுமையாக முடிவடைந்தவுடன், விரைவில் அந்தப் பாலம் திறக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

2015 செப்டம்பர் 1]

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமத்தி மாவுருட்டியிலிருந்து நாமக்கல்–திருச்செங்கோடு செல்லும் சாலை, வழியிலிருக்கக்கூடிய வேலகவுண்டம்பட்டி பகுதிவரை தொழிற்சாலைகள் மற்றும் கோழிப் பண்ணைகள் உள்ளன. போக்குவரத்து நெருக்கடியும், மக்கள் அடர்த்தியும் அதிகமாக உள்ள சாலையாகும். அந்தச் சாலை மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது. அதனை இருவழிச் சாலையாக மாற்றவும், பழுதடைந்த சாலைகளைச் சீர்செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று எங்கள் தொகுதியில் மோகனூரிலிருந்து வேலூர் வரையிலிருக்கிற, பாலப்பட்டியிலிருந்து நாமக்கல் மற்றும் வள்ளிபுரத்தை இணைக்கக்கூடிய மிக முக்கியச் சாலையாக இருக்கிற வாழவந்தி வழிச் சாலை மிகவும் பழுதடைந்து உள்ளது. அதனை இருவழிச் சாலையாக மாற்றவும், பழுதடைந்த சாலைகளை விரைந்து செப்பனிடவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு சாலைகளைக் குறிப்பிட்டு, பழுதுகளைச் சீர்செய்யக் கோரியிருக்கிறார்கள். அவை அனைத்தையும் ஆய்வு செய்து, படிப்படியாக நிதிநிலைக்கேற்ப சாலைகள் சீர்செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட தாழையூத்து, கள்ளிமந்தையம், இடையக்கோட்டை, தாடிக்கொம்பு வரை, சுமார் 80 கி.மீ. மாநில நெடுஞ்சாலை சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு சீர் செய்யப்பட்டது. இப்பொழுது அந்தச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அந்தச் சாலையைச் சீர் செய்ய

நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், எனது தொகுதியில் வேலம்பட்டி, கூத்தங்குடி போன்ற பல்வேறு மாவட்ட முக்கியச் சாலைகள் பழுதடைந்துள்ளன. அவை 5 ஆண்டுகளுக்கும் மேலாகப் பழுதடைந்த நிலையில் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றைப் பரிசீலித்து உடனடியாகச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு சாலைகளைக் குறிப்பிட்டு அவை சீர் செய்யப்படுமா என்று இங்கே கேட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில், இந்த நான்காண்டுக் காலத்தில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக 119.37 கி.மீ. நீளச் சாலைகள் ரூ.46.35 கோடி செலவில் அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். புள்ளிவிவரம் எங்கள் கையில் இருக்கின்றது.*

முற்பகல் 10—25

2015—2016 ஆம் ஆண்டில் சுமார் 62.80 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் ரூ.51.64 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தும் பணிகளுக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த 4 ஆண்டுக் காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதியில் ரூ.28.34 கோடி செலவில் 16 பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவையெல்லாம் எங்களிடத்திலே இருக்கின்ற குறிப்பு; செய்து முடிக்கப்பட்ட பணிகள் பற்றிய விவரங்கள். (குறுக்கீடு) எங்களுடைய ஆட்சியில் செய்ததைத்தான் நான் சொல்கிறேன். எங்களுடைய ஆட்சியில் என்னென்ன பணிகள் செய்து முடிக்கப்பட்டன என்ற விவரங்கள் முழுமையாக இருக்கின்றன.

2015 செப்டம்பர் 1]

எல்லா விவரங்களையும் புள்ளிவிவரத்தோடு நாங்கள் வைத்திருக்கிறோம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மலர்ந்த பிறகு, எடுக்கப்பட்ட பாலப் பணிகள் பற்றிய விவரங்கள் அனைத்தையும் வைத்திருக்கிறோம்; நிறைய விவரங்கள் இருக்கின்றன. ஆகவே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தைப் பற்றி நாங்கள் சொல்வதற்கு முடியாது. ஆனால், எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மலர்ந்த பிறகு இந்த 4 ஆண்டுக் காலத்திலே, மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்றத் தொகுதியிலே மேற்கண்ட பணிகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றேன். எப்பொழுது பார்த்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியிலே எந்தப் பணிகளும் நடைபெறவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே, புள்ளிவிவரத்தோடு இதனை நான் குறிப்பிட விரும்புகிறேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

185—

தொழிற்பயிற்சி நிலையம்

***55567—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை